Registered as a Newspaper
பக்கங்கள் 16 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 51

செவ்வாய்க்கிழமை
16 ஜனவரி 2024

தை 02 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"வெட்டுறதும் ஒட்டுறதும் அரசியலில சகஜம் தான் கண்டியளோ"

ஐக்கிய மக்கள் சக்தியில்

# பொன்சேகாவுக்கு வெட்டு; ரணிலோடு கூட்டு?

## கொழும்பு அரசியலில் விரைவில் திருப்புமுனை

**கொழும்பு, ஜனவரி 16**

**கொழும்பு அரசியலில் அடுத்து வரும் வாரங்களில் பெரும் திருப்புமுனைகள் ஏற்படவுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள சரத் பொன்சேகா, அந்தக் கட்சியில் இருந்து விலகவுள்ளார் என்றும், ஜனாதிபதி ரணிலோடு கூட்டாக அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்க சஜித் பிரேமதாஸ இணங்கியுள்ளார் என்றும் நம்பகரமாக அறிய வருகின்றது.**

15

## வானில் பறந்த 'வற்'




யாழ்ப்பாணம், ஜன.16
'வற்'வரி உயர்வைக் கிண்டலடிக்கும் வகையில், பட்டப் போட்டியில் பறக்கவிடப்பட்ட பட்டமொன்று அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

15

## காற்றில் கடும் மாசு!

### புகார்மண்டலத்துக்குள் யாழ்.

கொழும்பு, ஜன.16
யாழ்ப்பாணம் உட்பட நாட்டின் பல பகுதிகளில் காற்றில் மாசு அதிகரித்துள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபை எச்சரித்துள்ளது.

"கொழும்பு, காலி, யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் ஆகிய பகுதிகளில் காற்றின் தரம் குறைந்து மாசு அதிகரித்துள்ளது.

இந்தியாவிலிருந்து வரும் காற்றோட்டம் நாடு முழுவதும் கடந்து செல்வதே இதற்குக் காரணம்.

சுவாசநோய் அல்லது நுரையீரல் தொடர்பான நோய்களுக்குச் சிகிச்சை பெற்று வருபவர்கள் இருப்பின் முகக்கவசம் அணிவதன் மூலம் காற்றுமாசால் ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்க்கலாம்" என்று சுற்றாடல் அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் அஜித் வீரசுந்தர தெரிவித்துள்ளார். (அ-1)



## மொட்டு பின்வாங்கும்?

கொழும்பு, ஜன.16
அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் வேட்பாளர் ஒரு

15

## தயாசிறி, ரொஷான் சஜித்தோடு சங்கமம்

கொழும்பு, ஜன.16
நாடாளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர, ரொஷான் ரணசிங்க ஆகியோர் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணி

15

## ரணிலின் அமைச்சு தென்னக்கோனிடம்!

கொழும்பு, ஜன.16
54ஆவது உலகப் பொருளாதார வருடாந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக கடந்த 13 ஆம் திகதி சுவிட்ஸர்லாந்துக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

15

## இமாலயப் பிரகடனத்தை விடுத்து சுயநிர்ணய உரிமையை ஆதரிக்குக!

### சுவிஸ் ஜனாதிபதியிடம் கோரிக்கை

வவுனியா, ஜன.16.
இமாலயப்பிரகடனத்தை ஆதரிப்பதை விட, தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவை வழங்குங்கள் இவ்வாறு - காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம், சுவிஸ் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது. தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவு

15

Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
14 EDITION
JITF 2024
JANUARY ஜனவரி
19 20 21
10.00 மு.ப - 8.00 பி.ப
Muttraweli Grounds முற்றவெளி மைதானம்
இன்னும் 3 நாட்களில்
ORGANIZED BY LECS



றைனோ சிமென்ட் ரூப்பிங் ஷீட்
சிறந்த விலைக்கு நீண்ட காலம் பாவிக்கக்கூடிய கூரை
RHINO 60 YEARS
www.rhino.lk
ரூ. 3,955/- இலிருந்து துரித அழைப்பு 0115 748728 • இலங்கையின் முதற்தர ரூப்பிங் மற்றும் சீலிங் ஷீட் • 60 வருட நம்பிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் அதிகரித்த களைநெல் தாக்கம்

மன்னார், ஜன.16

**விவசாயிகள் களைநெல் தாக்கம் தொடர்பாக அவதானமாகச் செயற்பட வேண்டும் என்று மன்னார் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் சகிலா பானு அறிவுறுத்தியுள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது; மன்னார் மாவட்டத்தில் களைநெல் தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ளது. களைநெல் தண்டுப்பகுதியில் ஊதா நிறத்தில் கரும்புள்ளிகளுடன் காணப்படும். விவசாயிகள் களைநெல்லை வெட்டி அகற்ற வேண்டும். விவசாயிகளால் களைநெல்லை அடையாளம் காண்பது கடினமாக இருந்தால் அருகில் உள்ள கமநல சேவைகள் நிலையத்தை நாட முடியும். உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படாவிட்டால் களை நெல் விதை உதிர்ந்து பரவலடையக்கூடும். இது விளைச்சலில் தாக்கத்தை ஏற்படுத்தும் - என்றார். (எ-125)

## கைக்குண்டுடன் கைதானவர் பல திருட்டுகளுடன் தொடர்பு!

மற்றுமொருவர் கைது

யாழ்ப்பாணம், ஜன.16

இளவாலையில் கைக்குண்டுடன் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டவர் பல திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்று விசாரணைகளில் கண்டறிப்பட்டுள்ளது. விசாரணைகளின் அடிப்படையில் மேலும் ஒருவரும் சான்றுப் பொருள்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இளவாலை, நாதவோலையைச் சேர்ந்த 37 வயதான சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் இருந்து கைக்குண்டு, கத்தி என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகநபருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபர் திருட்டுப் பொருள்களை விற்பனை செய்த சாவகச்சேரியைச் சேர்ந்த 25 வயதுடைய ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து இலத்திரனியல் பொருள்கள், சமையல் உபகரணங்கள் என்பவை கைப்பற்றப்பட்டுள்ளன.

அதேவேளை, இராணுவத்தின் மூலமே கைக்குண்டு கிடைத்தது என்று சந்தேகநபர் பொலிஸ் விசாரணையில் தெரிவித்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (எ-125)

## பொலிஸாரை தாக்கியவர் கைது

கொழும்பு, ஜன.16

ஹோமாகம பிரதேசத்தில் உள்ள வீடொன்றுக்கு நீதிமன்ற அழைப்பாணை வழங்கச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தரைத் தாக்கினர் என்று கூறப்படும் இராணுவச் சிப்பாயும், பெண்ணொருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துருகிரிய பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தொடர்பான வழக்கு ஒன்றின் நீதிமன்ற அழைப்பாணையை வழங்குவதற்காக சந்தேகநபரின் வீட்டுக்குப் பொலிஸ் உத்தியோகத்தர் சென்றுள்ளார். அப்போது சந்தேகநபர்கள் வீட்டுக்குள் மது அருந்திக்கொண்டிருந்துள்ளனர். பொலிஸ் உத்தியோகத்தர் நீதிமன்ற அழைப்பாணை தொடர்பில் சந்தேகநபரிடம் தகவல் கோரியபோது அவர்கள் பொலிஸ் உத்தியோகத்தருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு அவரின் அந்தரங்க உறுப்பில் தாக்கியுள்ளனர். தாக்குதலுக்கு இலக்கான உத்தியோகத்தர் அத்துகிரிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ-இ)

## இந்தியாவில் இருந்து 20 ரயில் இயந்திரங்கள்!

கொழும்பு, ஜன.16

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு இலவசமாக வழங்கப்படும் 20 ரயில் இயந்திரங்களில் 2 இயந்திரங்கள் எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கைக்கு கொண்டுவரப்படவுள்ளன என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த இயந்திரங்கள் இலங்கையில் இயங்குவதற்கு ஏற்றவையா என ஆராய்வதற்காகவே இவை முதற்கட்டமாகக் கொண்டுவரப்படுகின்றன. ரயில் இயந்திரங்களை ஆய்வு செய்வதற்காக இலங்கை ரயில்வே திணைக்களத்தைச் சேர்ந்த 5 பரிசோதகர்கள் இந்தியாவுக்குச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## சைக்கிள் திருட்டு

சுதுமலை அம்மன் ஆலய வளாகத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளது என முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்ள வந்த ஒருவர் சைக்கிளை நிறுத்திவிட்டு வழிபாடு முடித்து வந்தபோது, சைக்கிள் காணாமற் போயிருந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-125)

## டெங்கைக் கட்டுப்படுத்த பாரபட்சமற்ற நடவடிக்கை

வடக்கு ஆளுநர் பணிப்புரை

யாழ்ப்பாணம், ஜன.16

நுளம்புக் குடம்பிகள் பெருகும் வகையில் சூழலை வைத்திருப்போருக்கு எதிராக பாரபட்சம் இன்றி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் பணிப்புரை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் டெங்குத் தொற்று அதிகரித்துள்ள நிலையில், யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு உட்பட்ட பகுதிகளிலேயே அதிக டெங்குத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்தநிலையில் வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் நடைபெற்ற டெங்கு நிலைமை தொடர்பான மீளாய்வுக் கூட்டத்தில் ஆளுநரால் மேற்கண்ட பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு பொலிஸாரின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், பொதுமக்களும் சமூகப் பொறுப்புகளை உணர்ந்து செயற்படுவது இன்றியமையாதது என்றும் வடக்கு ஆளுநர் குறிப்பிட்டுள்ளார். (எ-26)

## சீரான வானிலை

கொழும்பு, ஜன.16

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் பிரதானமாக சீரான வானிலை நிலவும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30 முதல் 40 கிலோ மீற்றர் வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கொழும்பிலிருந்து புத்தளம் மற்றும் மன்னார் ஊடாக காங்கேசந்துறை வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் பொத்துவிலிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக மாத்தறை வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 முதல் 55 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. (எ-இ)

## மீண்டும் பெண் பிரதமர்?

கொழும்பு, ஜன. 16

அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஆட்சியில், இலங்கையில் மீண்டும் பெண்ணொருவரே பிரதமராக நியமிக்கப்படுவார் என்று ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

3 சதவீத வாக்குகளே எங்களுக்கு உள்ளது என விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும் அது தற்போது 50 வீதத்தை தாண்டியுள்ளது. ஜே.வி.பி.யின் கூட்டங்களில் பங்கேற்காதவர்கள்கூட நிச்சயம் வாக்களிப்பார்கள்.

எமது நாட்டுச் சனத்தொகையில் பெரும்பாலானவர்கள் பெண்கள். எனவே, தேசிய மக்கள் சக்தியின் பிரதமர் பெண்ணொருவராக இருக்கக்கூடும். பெண் தலைவியொருவர் பிரதமராக வேண்டும் என்பதே எமது நாட்டுப் பெண்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது' - என்றார். (ம-44)

## ஊழல் பேர்வழிகளுக்கு எதிராக நடவடிக்கை

கொழும்பு, ஜன. 16

தேசிய வளங்களைக் கொள்ளையடித்த அரசியல்வாதிகளுக்கு எதிராக ஜே.வி.பி.யின் ஆட்சியில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இதில் எந்தவொரு விட்டுக்கொடுப்பும் இருக்காது - என்று ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நாம் அரசியலில் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்கள் அல்லர். ஊழல், மோசடிகளுக்கு இடமளிப்பவர்களும் அல்லர். எனவே, எமது நாட்டு வளங்களை கொள்ளையடித்தவர்களுக்கு எதிராக நிச்சயம் சட்டம் செயற்படுத்தப்படும்.

ஜே.வி.பி.யின் கொள்கைகளுக்கு எதிரானவர்களுடனும், துரோகிகளுடனும் கூட்டணி அமைப்பதற்கு நாம் தயாரில்லை. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில், முன்னணி சோசலிசக் கட்சியுடன் கூட்டணி அமைக்கமாட்டோம்.

சர்வதேச நாணயநிதியத்தின் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுவிட்டது. எனவே, எமது ஆட்சியில் அது மீளாய்வுக்கு உட்படுத்தப்படும். மக்களின் எதிர்பார்ப்புக்கு அமைய மீளமைக்கப்பட்டு செயற்படுத்தப்படும்' - என்றார். (ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலே மக்களின் விருப்பம்

கொழும்பு, ஜன.16

**இலங்கையில் பெரும்பான்மையான மக்கள் ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்த விரும்புகின்றனர் என்று தனியார் நிறுவனம் ஒன்று நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.**

லங்கா ஆய்வு நிறுவனம் நடத்திய ஆய்வில், 20 சதவீத மக்கள் மட்டுமே ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலை விரும்புகின்றனர் என்று தெரியவந்துள்ளது.

சுமார் 81.9 சதவீத மக்கள் பொருளாதாரத்தை உற்பத்தி அடிப்படையிலான ஒன்றாக மாற்றுவதன் மூலமும், ஏற்றுமதியை அதிகரிப்பதன் மூலமும் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த வேண்டும் என்று நம்புகிறார்கள்.

34.6 சதவீதம் பேர் மட்டுமே அமைப்பு மாற்றத்தை நம்புகிறார்கள், அதே நேரத்தில் 16.5 சதவீதம் பேர் கடுமையான சட்டங்களின் மூலம் நாட்டை மேம்படுத்தமுடியும் என்று நம்புகிறார்கள் என அந்த ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது. (எ-இ)

## அதிகரிக்கின்றது பால்மா விலை

கொழும்பு, ஜன.16

இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் விலை அடுத்த வாரம் முதல் அதிகரிக்கப்படும் என பால் மா இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் 400 கிராம் பால் மா பொதியின் விலை 30 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது என்றும், இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கிராம் பால் மா பொதியின் விலை 75 ரூபாவால் அதிகரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (எ-இ)

### பிளாஸ்ரிக் தும்புத்தடி, விளக்குமாறு;

## விரைவில் தடை

பிளாஸ்ரிக் விளக்குமாறு மற்றும் தும்புத்தடி ஆகியவற்றின் இறக்குமதியை உடனடியாக தடைசெய்யவேண்டும் என்று மத்திய சுற்றாடல் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

சுற்றுச்சூழல், இயற்கை வளங்கள் மற்றும் நிலையான அபிவிருத்திக்கான துறைக் குழுவின் கலந்துரையாடலின்போதே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் பரிந்துரைகள் மேற்கொள்ளப்படும் என அந்தக் குழுவின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும தெரிவித்துள்ளார்.

பிளாஸ்ரிக் கழிவுகளைக் குறைக்கும் வகையில் 'லஞ்ச் சீற்' பாவனையைத் தடை செய்வதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (எ-இ)

## விமான நிலையத்தின் பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு, ஜன.16

நாட்டின் அனைத்து விமான நிலையங்களினதும் பாதுகாப்பை அதிகரிப்பதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது என்று துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா தெரிவித்துள்ளார்.

விமான நிலையத்தினூடாக முன்னெடுக்கப்படும் சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுக்கும் நோக்கில் விமான நிலையப் பாதுகாப்புப் பணியாளர்களின் எண்ணிக்கையை ஆயிரத்து 325 ஆக அதிகரிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## இணையக் கடன் மோசடி; சீனர்கள் கைது

கொழும்பு, ஜன.16

இணைவழிக் கடன் மோசடி தொடர்பில் ஐந்து சீனர்கள் உட்பட ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தெஹிவளையில் அமைந்துள்ள இணையவழி மூலமான கடன் வழங்கும் நிலையமொன்றை சுற்றிவளைத்த குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சந்தேகநபர்களைக்கைதுசெய்துள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து 8 கணினிகளும், 13 மடிக்கணினிகளும் மற்றும் 49 கைத்தொலைபேசிகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இவர்கள் இணையவழி மூலம் கடன் வழங்கும் போது, கடனாளியின் கைபேசியின் தனிப்பட்ட தகவல்களை, 'ஓடிபி' எண் மூலம் பெற்று, சமூகத்தில் சில தகவல்களைப் பரப்பி மிரட்டி, உரிய பணத்தைப் பெற்றுக் கொண்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகள் கணினிக் குற்றத்தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்படடு வருகின்றன. (எ-இ)

## பட்டினியால் பாக்குத் திருட்டு; ஒருவர் வீழ்ந்து உயிரிழப்பு

கொழும்பு, ஜன.16

திருட்டுத்தனமாக மரத்தில் ஏறி பாக்கினைப் பறிக்க முயன்ற ஒருவர் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இரு நாள்களாக உணவின்றித் தவித்த இவர், பிறிதொருவரின் காணியில் பாக்குத் திருட முயன்றபோதே தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார் என்று கூறப்படு கின்றது.

இந்தச் சம்பவம், கடுகண்ணாவை, நாவுல்ல பிரதேசத்தில் நடந்துள்ளது. 30 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார். சடலம் பிரேத பரிசோதனைக்காக, கண்டி தேசிய மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## தினம் தெரியுமோ?

**ஊ**ருக்கு உபதேசம் செய்யிறவை முதல்ல அதுகளைத் தாங்களும் ஒழுங்காப் பின்பற்றுறது கட்டாயம். இல்லாட்டி ஒண்டும் சொல்லாமல் தங்கட பாட்டில இருக்கோணும். கம்பராமாயணத்தில பரதன்ர கதை உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும். இராமரின்ர செருப்பைத் தன்ர தலையில சுமந்துகொண்டு வந்து, அதை அரியணையில வைச்சு, ஆட்சி செய்தவன் எண்டு படிச்சிருப்பியள். ஆனால் இராமரின்ர செருப்பு மாதிரி எல்லாச் செருப்புக்கும் அந்த யோகம் கிடைக்காது. என்னதான் நாங்கள் செருப்பைப் போட்டுக்கொண்டு ஊர் முழுக்க உலாத்தினாலும், வீட்டு வாசலோட அதைக் கழட்டிப் போடுவம். ஏனெண்டால் வீட்டுக்கு ஒரு மரியாதை இருக்கு. அதைமாதிரி கோயிலுக்குள்ளையும் செருப்போட போகமாட்டம். சாமி சம்பந்தப்பட்ட விசயங்களையும் செருப்புப் போட்டுக்கொண்டு செய்யிறேலை. மற்றவையில உள்ள பக்தி, மரியாதையைக் காட்டுறதுக்கு இப்பிடிச் செருப்பைக் கழட்டிறதை தமிழர்கள் ஒரு மரபாவே வைச்சிருக்கிறம்.

இப்ப என்னத்துக்கு செருப்பைப் பற்றி இவ்வளவு பிலாக்கனத்தை பட்சி படிக்குது எண்டு யோசிப்பியள். காரணம் இருக்கு. கம்பராமாயணத்தைக் கரைச்சுக் குடிச்சு, கன்னித் தமிழ் பாடி கம்பன் புகழை வளர்க்கிறன் எண்டு வெளிக்கிட்ட ஒரு வாரிதியார், நேற்று செருப்பைப் போட்டுக்கொண்டு நிண்டு தைப்பொங்கல் பானையில 'பயபக்தியோட' அரிசி போட்டு பொங்கியிருக்கிறார். அதை வீடியோவா வேற தன்ர பேஸ்புக் பக்கத்தில 'லைவ்வா' போட, பேஸ்புக்கே பத்தியெரியத் தொடங்கி, வாரிதியாரின்ர பொங்கலுக்கு எதிரா எல்லாரும் பொங்கத் தொடங்கிட்டினம். சொந்தக் காசிலையே சூனியம் வைச்சிட்டார் வாரிதியார்.

பிரசங்கம், பட்டிமன்றம் எண்டு தனக்குத் தெரிஞ்ச துறையை விட்டிட்டு இப்ப தனக்குச் சம்பந்தமேயில்லாமல் அந்தக் கட்சிக்கு இவர்தான் தலைவரா வரோணும், இந்த மாகாணத்துக்கு இவர்தான் முதலமைச்சரா வரோணும் எண்டெல்லாம் உந்த வாரிதியார் உலகமகா அறிவாளி எண்டு தனக்குத் தானே தலைப்பாகை கட்டிக்கொண்டு திரியிறார். ஆனால் அவர் உலகமகா விசயங்கள் எண்டு சொல்லுறதெல்லாமே உலக்கைத்தனமான கருத்து எண்டு எல்லாருக்குமே தெரிஞ்சாலும், முகத்துக்கு அஞ்சி ஒருத்தரும் ஒண்டும் சொல்லுறேலை. உந்த வாரிதியார் கொஞ்சக்காலத்துக்கு முதல் காசு வாங்கிறதுக்காக வீணைவாசிக்கிறவையிட்ட தலையாரக் கும்பிட்டு, கூத்துமாடி , வாயெல்லாம் பல்லாகி குனிஞ்சு நிண்டவர் தான். ஆனால் இப்ப என்னடாவெண்டால் அவர், தான் ஒரு கறைபடியாத் தமிழ்த்தேசியவாதி போல கருத்துகளை அள்ளிவிடுறார்.

இப்பிடிப்பட்டவருக்கு, அதுவும் கோயிலைப் பற்றியும், நன்றிக்கடன் பற்றியும், சூரியனைப் பற்றியும், சாமியைப் பற்றியும், எங்கட கலாசாரம், மரபு பற்றியும் மேடை மேடையா கூவத் தெரிஞ்சவருக்கு (அதுவும் காசு வாங்கிக்கொண்டுதான்), சூரியனுக்கு நன்றி செலுத்திற, சைவசமயத்தில உள்ள ஒரு பொங்கல் பண்டிகைக்கு, செருப்பைப் போட்டுக்கொண்டு பொங்கல்பானைக்கு அரிசி போடக்கூடாதெண்டு தெரியாதாமோ? அறப்படிச்ச பல்லி பொங்கல் பானைக்குள்ள செருப்போடயெல்லோ விழுந்திட்டுது.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணவாளக்கோல உற்சவம்

யாழ்., ஜன. 16

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய கும்பாபிஷேக தின மணவாளக் கோல உற்சவம் நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. உற்சவத்தில் விநாயகருக்கும் அம்பாளுக்கும் 108 சங்காபிஷேகமும், ஏனைய பரிவாரமூர்த்திகளுக்கும் அபிஷேகமும் இடம்பெற்று, பி.ப 5 மணிக்கு விசேட பூசைகள் இடம்பெற்றுத் தொடர்ந்து வசந்தமண்டப பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. (ரி-66)

# திடீரென தீப்பிடித்த பேருந்து

கொழும்பு, ஜன.16

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பெலியத்த நுழைவாயிலுக்கு அருகில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்று தீப்பிடித்து எரிந்துள்ளது. சம்பவத்தில் பயணிகள் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

பஸ் முற்றாக தீப்பிடித்து எரிந்துள்ளது. இந்தச் சம்பவம் காரணமாக பெலியத்த நுழைவாயிலில் இருந்து சகல நுழைவாயில் வரையான நெடுஞ்சாலைப் பகுதி மூடப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

# காஸா விவகாரத்தில் பரந்துபட்ட பேச்சு!

## சீனா அழைப்பு



இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான மோதலை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக, பல தரப்பினரையும் உள்ளடக்கிய பெரியதொரு அமைதி மாநாட்டுக்கு முன்வரவேண்டும் என்று சீனா வலியுறுத்தியுள்ளது.

காஸா மோதல் தீவிரமடைந்து செங்கடல் பகுதி தற்சமயம் முக்கியமான போர்ப் புள்ளியாக மாறியுள்ளமையால், இஸ்ரேலிய- பலஸ்தீனிய அமைதி மாநாடு மற்றும் இரு நாடுகளின் தீர்வை செயற்படுத்துவதற்கான கால அட்டவணைக்கு சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி அழைப்பு விடுத்துள்ளார்.

எகிப்துக்குச் சென்றுள்ள சீன வெளிவிவகார அமைச்சர், எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் எகிப்திய வெளிவிவகார அமைச்சருடன் நடத்திய பேச்சின் பின்னரே இவ்வாறு தெரிவித்துள்ளார். மத்திய கிழக்கில் உள்ள நியாயமான விடயங்கள் தொடர்பில் சர்வதேச சமூகம் அவதானம் செலுத்தவேண்டும் என்றும் சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி மேலும் தெரிவித்தார். (ம)

# மயிலத்தமடுவில் நேற்றும் பண்ணையாளர்கள் போர்

மட்டக்களப்பு, ஜன. 16

மட்டக்களப்பு - மயிலத்தமடு, மாதவனை பகுதியில் கால்நடைப் பண்ணையாளர்கள் முன்னெடுத்து வரும் தொடர்போராட்டம் பொங்கல் பண்டிகையான நேற்றும் இடம்பெற்றது. மயிலத்தமடு, மாதவனை பகுதியில் உள்ள மேய்ச்சல் தரைகளை மீளவும் வழங்குமாறும், அங்கிருந்து நில ஆக்கிரமிப்பாளர்கள் வெளியேறவேண்டும் என்று வலியுறுத்தியும் இந்தப் போராட்டம் கடந்த நான்கு மாதங்களாக இடம்பெற்று வருகின்றது. இந்த நிலையிலேயே நேற்றும் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம-100)



தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஏழாலை சகோதர இளைஞர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்த வங்கிப் பிரிவின் அனுசரணையில் குருதிக் கொடை முகாம் நிகழ்வு ஏழாலை தெற்கிலுள்ள தனியார் வர்த்தக நிலைய மண்டபத்தில் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்றது. (ரி-66)

வடமாகாண ஆளுநரின் அலுவலகத்தில் நேற்று பொங்கல் பண்டிகை வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளும் பொங்கல் விழாவில் கலந்து கொண்டனர். (ம-66-26)



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும், தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளது. பொறுமை அவசியம்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. காரியங்கள் சாதகமாக முடியும். உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும்.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கும் திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சிலருக்கு உறவினர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புள்ளது. பேசும் வார்த்தைகளில் நிதானம் தேவை.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாகும். புதிய முயற்சிகளுக்கு சாதகமான நாள். செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. எதிர்பார்த்த தகவல் கிடைக்கும். மகிழ்ச்சி உண்டாகும்.

**சிம்மம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். கையிருப்பு கரைவதுடன் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். பிணக்குகள் நீங்கும். குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படலாம்.

**கன்னி:** பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். முக்கியமான முடிவுகள் சாதகமாக முடியும். தொலைதூரத்திலிருந்து எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும்.

**துலாம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உங்கள் முயற்சிகளுக்கு உறவினர்கள் ஒத்துழைப்புத் தருவார்கள். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். எதிரிகள் வகையில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது கவனமாக இருக்கவும். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்படலாம். பாதிப்பு எதுவும் இருக்காது.

**தனுசு:** புதிய முயற்சி எதுவும் வேண்டாம். அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். செலவுகளைச் சமாளிக்க வேண்டிய சூழ்நிலையும் சிலருக்கு ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும்.

**மகரம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்னியம் அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.


**கும்பம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த பணஉதவி கிடைக்கும். செலவு செய்யவேண்டிவரும். பணவரவு கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்தவும். சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். மனவருத்தங்கள் நீங்கும்.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்துக்கும், மாணவர் ஒன்றியத்துக்கும் இடையிலான சிநேகபூர்வ கலந்துரையாடல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. (எ-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜன. 16
சைவவாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக, சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சிறுப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயப் பிரதான மண்டபத்தில், எதிர்வரும் 19ஆம் திகதி சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. சேக்கிழார் பெருமானின் குருபூஜையைத் தொடர்ந்து சொற்பொழிவினை இளம்சைவப்புலவர் க.கைலநாதன் 'அடியவர்களின் ஓலம்கேட்டதும் விரைந்து சென்று யானையையும் பாகனையும் வெட்டி வீழ்த்திய நாயனார்' என்னும் விடயப்பொருளில் ஆற்றவுள்ளார். (ம)

# மலையகத்தில் பொங்கல் அரசுக்குத் தகுதியில்லை!

## வேலுகுமார் சாடல்

**கொழும்பு, ஜன. 16**

**மலையகத்தில் தேசியப் பொங்கல் விழா நடத்துவதற்கு அரசாங்கத்துக்குத் தகுதி இல்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் கண்டியில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நாட்டின் பொருளாதார நெருக்கடி நாளுக்கு நாள் மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டு வருகின்றது. நாட்டு மக்கள் அனைவரும் இந்தப் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டிருந்தாலும், கூடுதலான பாதிப்புகளை எதிர்கொண்டிருப்பது பெருந்தோட்டத் தொழிலாளர்களே. உத்தரவாதம் வழங்கப்பட்ட ஊதியம் இன்னமும் வழங்கப்படவில்லை. மறுமுனையில் விலைவாசிகளின் அதிகரிப்பு, வாழ்க்கைச் செலவின் உயர்வு மக்களைச் செய்வதறியாத நிலைக்குத் தள்ளிவிட்டுள்ளது. இவ்வாறானதொரு நிலையில் மலையத்தில் பொங்கல்விழாவை நடத்துவதற்கு அரசுக்குத் தகுதியில்லை.

விறகு வைத்து, தீ மூட்டி பொங்கல் பொங்கத் தேவையில்லை. தாய்மார்களின் வயிற்றில் இருந்து பற்றி எரியும் நெருப்பிலேயே பொங்கல் பொங்கி விடலாம். மக்கள் இவ்வாறு திண்டாடும்போது, கொண்டாட்டங்களை ஏற்பாடு செய்ய வெட்கம் இல்லையா? எங்கள் மக்களுக்கு உண்மையான பொங்கல் பிறப்பது சம்பளம் அதிகரிக்கும் நாளிலேயே. கொண்டாட்டத்தை விட்டு சம்பள அதிகரிப்புக்கு வழிசெய்யுங்கள் - என்றார். (ம)



யாழ்ப்பாணம், கொட்டடி கோட்டை வெள்ளாந்தெரு பகுதிகளில் வாழும் பொருண்மியம் நலிவுற்ற தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு மாநகர சபை முன்னாள் உறுப்பினரும் சமூக சேவையாளருமாகிய லயன் கலாநிதி நா. தனேந்திரன் தனது 68ஆவது பிறந்தநாள் பரிசாக பொங்கல் பானையை வழங்கினார். (ய)

யாழ்ப்பாணம், வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய தைப்பொங்கல் சிறப்பு வழிபாடுகள் ஆலய பிரதம குருவான கணபதீஸ்வரக் குருக்கள் தலைமையில் நேற்று இடம்பெற்றது. வசந்த மண்டப பூசைகளைத் தொடர்ந்து சுவாமி உள்வீதியில் உலாவந்தார். (ம-66)





தலைமன்னார் மேற்கு புனித லோறன்சியார் ஆலயத்தில் நேற்று பொங்கல் பண்டிகை வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பங்குத் தந்தை மாக்கஸ் அடிகளாரின் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. (ம-60-56)



வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்தில், நேற்று சிறப்பான முறையில் தைப்பொங்கல் கொண்டாடப்பட்டது. வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்தின் சமுதாயப் பிரிவின் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் பிரியரத்தன தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன. (ம-110)



தமிழர்களின் பெருவிழாக்களில் ஒன்றான தைப்பொங்கல் விழா இம்முறையும் மன்னார் மாவட்டத்தில் தமிழ் மக்களால் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்து, கத்தோலிக்க ஆலயங்களில் பொங்கல் வழிபாடுகள் இடம்பெற்றன. (ம-60)



தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, நல்லைக் கந்தன் தண்ணீர்ப் பந்தல் அமைப்பினரின் உதவும் கரங்கள் செயற்றிட்டம் ஊடாகப் பொருளாதார ரீதியாக நலிவுற்ற நிலையில் வாழ்ந்துவரும் 75 குடும்பங்களுக்கு பொங்கல் பொதிகள் வழங்கப்பட்டன. (ம-66)

## மயிலத்தமடு ஆக்கிரமிப்புகள்

# மாடுகளுக்கு நீதிகோரி யாழில் இன்று போர்!

மட்டக்களப்பு, மயிலத்தமடுப் பகுதிகளில் பசுக்களுக்கும், காளைகளுக்கும் இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் இன்று கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம் நல்லை ஆதீன முன்றிலில் இன்று மாலை 5 மணிக்கு இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது.

மயிலத்தமடுப் பகுதியில் பசுக்களுக்கும், காளைகளுக்கும் ஏற்படுத்தப்படும் துன்பங்கள் உடனடியாக களையப்படவேண்டும், அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளும், நீதிமன்ற உத்தரவுகளும் முறையாகப் பின்பற்றப்படவேண்டும், மாடுகளின் மேய்ச்சல்தரைகளில் இருந்து சட்டவிரோத குடியேறிகளும் ஆக்கிரமிப்பாளர்களும் வெளியேறவேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தியே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மலையகப் பொங்கலும் பின்னுள்ள தந்திரமும்!


நாட்டின்தேசியப் பொங்கல்விழாவை - இம்முறை மலையகத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் செயற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு அண்மையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, அந்தந்தப் பகுதி மக்களின் கவனக்குவிவை ஈர்த்திருந்தார். அதன் தொடர்ச்சியாக, தேசியப் பொங்கலை மலையகத்தில் நடத்தி, அதன்மூலம் மலையக மக்களின் மாண்பையும் பெற்றுவிடலாம் என்று அவர் மனப்பால் குடிப்பதன் விளைவே இந்த நிகழ்வுகளின் பின்னுள்ள சூட்சுமம் என்று கருத வேண்டியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறுபான்மை மக்களின் வாக்குகளில் அதீத நம்பிக்கை கொண்டவர். முதிர்ச்சிபெற்ற அரசியல்வாதியென்பதால் சிறுபான்மை மக்களுடைய வாக்குகளுக்கு இருக்கும் பலம் அவருக்குத் தெரியும். தமிழர்கள் ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணித்ததால் தனது ஜனாதிபதிக் கனவு முன்னொரு காலத்தில் சுக்குநூறாகக் கலைந்துபோன பட்டனுபவமும் அவருக்கு உண்டு. ஆதலால், சிறுபான்மை மக்களை நோக்கிய அவரின் ஓட்டத்தை திடீர் பாசத்தை புரிந்துகொள்வதொன்றும் அவ்வளவு சிரமத்துக்குரிய காரியமல்ல. ஆனால், அந்த மக்கள் கூட்டத்துக்காக, தனது நீண்ட நெடிய அரசியல் பயணத்தில், சதியாட்டங்களைத் தவிர வேறொன்றையும் ரணில் செய்யவில்லை என்பதே கசப்பான மெய்.

சிறுபான்மை மக்களைப் பொறுத்தவரைக்கும் இலங்கை ஒரு சபிக்கப்பட்ட தேசம்தான். ஈழத் தமிழர்களுக்கு எதிராகக் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைகளைப் போன்று மலையக மக்களும் இந்தத் தீவில் காலம்காலமாக வஞ்சிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றனர். இனப்படுகொலைகளுக்குப் பதிலாக அவர்கள் மீது 'பொருளாதாரப் படுகொலைகள்' அரசாங்கத்தாலும், அரசாங்க ஆதரவுபெற்ற 'கொம்பனிகளாலும்' ஏவப்பட்டன ஏவப்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஈழத்தமிழர்களுக்கும் மலையகத் தமிழர்களுக்கும் இடையிலான வேறுபாடு அவ்வளவே. மற்றும்படி இரு இனக்குழுக்களும் ஆலைவாய்க் கரும்பாக நெரிக்கப்பட்டுக் கொண்டிருப்பது 'பொதுமைப்பாடே'.

'ஓர் உழைப்பாளியின் வியர்வை உலர்ந்துபோவதற்குள் அவனுக்கான ஊதியத்தை வழங்கிவிட வேண்டும்' என்கின்றது விவிலியம். விவிலியம் மட்டுமல்ல உலகிலுள்ள அநேகமான மறைநூல்களும் - அறநூல்களும் இதைத்தான் பறைசாற்றுகின்றன. ஆனால் இந்தச் சித்தாந்தத்துக்கும் மலையக மக்களின் வாழ்வியலுக்கும் கிஞ்சித்தும் பொருத்தமில்லை. ஆயிரம் ரூபா ஊதியத்தை வழங்குமாறு நெடுகாலமாக மலையக மக்கள் (தோட்டத் தொழிலாளர்கள்) போராடிக்கொண்டிருக்கின்றனர். அவர்களின் கோரிக்கை இன்னமும் செவிசாய்க்கப்படவில்லை. 2020களில் இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டபோதிருந்த பொருளாதார இயலுமையில் நாடு இப்போதில்லை. விலையேற்றங்கள் இடியாக இறங்கிக்கொண்டிருக்கின்றன. வற் வரியும் தன் பங்குக்கு வதைக்க ஆரம்பித்துள்ளது. மூன்றாண்டுகளுக்கு முற்பட்ட ஆயிரம் ரூபா ஊதியக்கோரிக்கைகூட இன்னமும் மெய்ப்பட்டபாடில்லை. இவ்வாறிருக்கையில் இந்தத் 'தேசியப் பொங்கல்'தான் மலையக மக்களின் எதிர்பார்ப்பா? என்ற கேள்வியை, பொதுப்புரிதலை - ரணில் அரசாங்கம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

மலையக மக்களின் குருதியை அட்டைகள் மட்டும் உறிஞ்சவில்லை. அட்டைகளுடன் போட்டிபோட்டு பெருந்தோட்டக் 'கொம்பனிகளும் 'காலாகாலம் மாறிமாறி ஆட்சிக்குவரும் பேரினவாத அரசுகளும்தான் உறிஞ்சிக் கொண்டிருக்கின்றன. இவ்வாறிருக்கையில், தேசியப் பொங்கலை அல்லாமல், 'தேசிய இனமாக' அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளும் வாழ்வுரிமையையும், தமக்கேற்ற ஊதியத்தையும்தான் மலையக மக்கள் ரணில் அரசிடம் எதிர்பார்க்கின்றார்கள். இவை நிறைவேற்றப்படாமல் மேற்கொள்ளப்படும் எந்தப் பொங்கலும் அவர்களுக்குத் தித்திக்கப்போவதில்லை.




# செயற்கை நுண்ணறிவால் தொழில்களுக்குப் பாதிப்பு

## சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஜன.16**

**செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடானது 40 சதவீத தொழில்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.**

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் அடிப்படையில் இந்த செயற்கை நுண்ணறிவு உலக நாடுகளிடையே சமத்துவமின்மையை மோசமாக்கும் என சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலீனா ஜோர்ஜீவா தெரிவித்துள்ளார்.

இந்தத் தொழில்நுட்பம் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் 60 சதவீத தொழில்துறையைப் பாதிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மனிதர்களால் செயற்படுத்தப்படும் முக்கியமான பணிகளைச் செய்யும் திறனை செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் கொண்டுள்ளதால், தொழிலாளர்களுக்கான தேவையும் எதிர்காலத்தில் குறைவடையும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-இ)

# 'யுக்திய' 952 பேர் கைது

கொழும்பு, ஜன.16

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட 'யுக்திய' சுற்றிவளைப்பில் மேலும் 952 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்று நள்ளிரவு 12.30 மணிவரை மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின்போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-இ)

# ஆடைகளின் விலையில் உயர்வில்லை

கொழும்பு, ஜன.16

வற் வரி அதிகரிக்கப்பட்டுள்போதும் சந்தையில் ஆடைகளின் விலைகள் அதிகரிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

வற் வரி திருத்தத்துக்கு முன்னதாக இறக்குமதி செய்யப்பட்ட ஆடைகள் தம்மிடம் உள்ளன என்றும் அதனால் அவற்றின் விலை அதிகரிக்கப்படவில்லை எனவும் விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ-இ)

# கலால் உரிமம்; கட்டணம் மீளாய்வு

கலால் உரிமக் கட்டணத்தை மீளாய்வது செய்வது தொடர்பில் மேலதிக கலந்துரையாடலின் பின்னர் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

ஜனாதிபதியால் வெளியிடப்பட்ட கலால் கட்டளைச் சட்டத்தின் மூலம், 2024 ஜனவரி 12 முதல் வருடாந்திர கலால் உரிமக் கட்டணத்தை திருத்தியமைக்க அரசாங்கம் முடிவு செய்திருந்தது. மதுவரி உரிமக் கட்டணம் உயர்த்தப்பட்டதற்கு பல மதுபான உற்பத்தி நிறுவனங்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. அதையடுத்தே நிதி இராஜாங்க அமைச்சர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாடு திரும்பியதும் இது தொடர்பான இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். (எ-இ)

# கொழும்பில் 'ரிவேரா' சொகுசுக் கப்பல்

'ரிவேரா' சொகுசுப் பயணிகள் கப்பல் நேற்றுக்காலை கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. மாலைதீவில் இருந்து ஆயிரத்து 90 பயணிகள் மற்றும் 790 பணியாளர்களுடன் இந்தக் கப்பல் வந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## நாளை

17.01.2024
**புதன்கிழமை**
**தை 03**

சுபநேரம் : 05.05 - 06.35
ராகுகாலம் : [illegible] - 02.05

## நாளொரு நல்வார்த்தை

**குழந்தையின் முகத்தை நாம் எப்பொழுது பார்க்கின்றோமோ, அப்போது நாம் எதிர்காலம் பற்றி சிந்திக்கின்றோம்.**

**- டெஸ்மண்ட் டுட்டு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஹமாஸ் அழிக்கப்படும்வரை போர்நிறுத்தம் சாத்தியமில்லை

## நெத்தன்யாகு அறிவிப்பு



டெல்அவிவ், ஜன. 16

**ஹமாஸ் அமைப்பு முற்றாக அழிக்கப்படும் வரையில் காஸாவில் போர் நிறுத்தம் என்பது சாத்தியமில்லை. சர்வதேச அழுத்தங்களுக்கு இஸ்ரேல் ஒருபோதும் அடிபணியாது என்று இஸ்ரேலின் பிரதமர் நெத்தன்யாகு தெரிவித்துள்ளார்.**

ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி இஸ்ரேலின் எல்லைகளைத்தகர்த்துக்கொண்டு உட்சென்ற ஹமாஸ் அமைப்பினர் சரமாரியாகத் தாக்குதல் நடத்தினர். பணயக்கைதிகளாக பலரைப் பிடித்துச் சென்றனர். இந்த அத்துமீறிய தாக்குதல்களைத் தொடர்ந்து கடந்த மூன்று மாதங்களாக காஸாவுக்குள் இஸ்ரேல் மும்முனைத் தாக்குதல்களை நடத்தி வருகின்றது.

இஸ்ரேல் நிரந்தரப் போர் நிறுத்தத்துக்குச் செல்லவேண்டும் என்று அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளும் வலியுறுத்தி வருகின்றன. அத்துடன், சர்வதேச நீதிமன்றத்தில் இஸ்ரேலுக்கு எதிராக தென்னாபிரிக்கா வழக்கும் தொடர்ந்துள்ளது. ஆனால் இஸ்ரேல் எதற்கும் கட்டுப்படவில்லை. இந்த நிலையிலேயே, 'ஹமாஸ் முற்றாக அழிக்கப்பட்டால்தான் காஸாவில் போர் நிறுத்தம் சாத்தியம். ஹமாஸால் மீண்டெழ முடியாத அளவுக்கு அதன் இயங்கு நிலையை வீழ்த்திவிட்டுத்தான் இஸ்ரேலியப் படைகள் காஸாவை விட்டு வெளியேறும்' என்று நெத்தன்யாகு மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# செங்கடலில் கண்காணிப்பை பலப்படுத்தியது அமெரிக்கா!

செங்கடல் பகுதியில் கனேடிய, அமெரிக்கக் கடற்படைகள் இணைந்து கூட்டுக் கண்காணிப்பை பல மடங்கு உயர்த்தியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பலஸ்தீனத்துக்கு எதிரான இஸ்ரேலின் தாக்குதல்கள் நிறுத்தப்படவேண்டும் என்றும், அல்லாவிடின் செங்கடல் பகுதியால் செல்லும் கப்பல்கள் இலக்குவைத்துத் தாக்கப்படும் எனவும் அறிவித்த ஹவுத்தி அண்மைக்காலமாகத் தாக்குதல்களையும் தீவிரப்படுத்தியிருந்தது.

இதையடுத்து கனடாவின் உளவுத்தகவல்கள் மற்றும் இராணுவ உதவிகளுடன் அமெரிக்கா மற்றும் பிரிட்டன் இணைந்து கடந்த இரண்டு நாள்களாக யேமனில் உள்ள ஹவுத்திகளின் நிலைகள் மீது கடும் வான் தாக்குதல்களை நடத்தின. இந்தத் தாக்குதல்களால் ஹவுத்திகளின் நிலைகள் பல அழிக்கப்பட்டுள்ளன என்று அமெரிக்கா தெரிவித்திருந்த நிலையில், சேதாரங்கள் தொடர்பில் ஹவுத்தியும் ஒப்புக்கொண்டுள்ளது. 'யூத மனோநிலையின் இந்தக் கூட்டுத் தாக்குதலுக்கு விரைவாகவே பதிலடி கொடுக்கப்படும்' என்று ஹவுத்தி எச்சரித்திருந்த நிலையில், கப்பல்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு செங்கடலில் அமெரிக்காவும் கனடாவும் தற்போது கடும் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. (ம)



# பனிப்பொழிவால் அவசரநிலை

வொஷிங்டன், ஜன. 16

பனிப்பொழிவு காரணமாக, அமெரிக்காவின் லூசியானா மற்றும் ஓர்கன்சா மாநிலங்களில் அவசரகால நிலைமை அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் அண்மைக்காலமாகக் கடும் பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. பனிப்புயல்கள் காரணமாக பனிப்பொழிவு, வெள்ளப்பெருக்கு என்பன அங்கு நாளுக்குநாள் தீவிரமாகி வருகின்றன. நாட்டின் வடகிழக்குப் பகுதிகளில் வெப்பமும், தெற்குப் பகுதிகளில் கடும் பனிப்பொழிவுமென மக்கள் மிகுந்த இடர்பாட்டுக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

இயற்கை இடர்களால் அமெரிக்காவின் லூசியானா மற்றும் ஓர்கன்சா மாநிலங்களில் அவசரகால நிலைமை அறிவிக்கப்பட்டுள்ளது. பனியால் ஏற்படும் இடர்பாடுகள் தொடர்பான மீட்புப் பணிக்காக அங்கு சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, பில்லிங்ஸ், மோண்டானா பகுதிகளில் வெப்பநிலை மைனஸ் 30 பாகையைத் தொடும் என்றும் பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்கவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்தப் பகுதிகளில் மக்களின் மின்சார நுகர்வு அதிகரித்துள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம)

அதி ஆபத்துகள் நிறைந்த

# மராபி எரிமலை திடீரென வெடிப்பு

இந்தோனேசியாவிலுள்ள அதி அபாயமான எரிமலையான மராபி எரிமலை, பேரிடரை ஏற்படுத்தும் அளவுக்கு வெடித்துச் சிதறி வருகின்றது. நேற்றுமுன்தினம் இந்த எரிமலை வெடிக்க ஆரம்பித்தது. நேற்று அந்த எரிமலை பேரிடரை ஏற்படுத்தும் அளவுக்கு அபாயம் மிக்கதாக வெடித்துச் சிதறி வருகின்றது. ஆகாயத்தில் 4200 அடிகள் உயரத்துக்குக் கரும்புகை எழுந்துள்ளது. இதனால் மராபி ஊடான விமானப் பயணங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. (ம)

# உக்ரைனை இலக்குவைத்து ஹைப்பர்சொனிக் ஏவுகணை

## போரைத் தீவிரமாக்குகின்றது ரஷ்யா

கீவ், ஜன. 16

உலகில் சக்தி வாய்ந்த ஏவுகணைகளாக அறியப்படும், ஹைப்பர்சொனிக் ஏவுகணைகளால் உக்ரைன் மீது ரஷ்யா மூர்க்கத் தாக்குதல் நடத்திவருகின்றது.

நேட்டோவுடன் உக்ரைன் இணைவதற்கு மேற்கொண்ட முன்னெடுப்புகளைத் தொடர்ந்து உக்ரைன் மீது ரஷ்யா இராணுவ நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றது. கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாக இந்தப் போர் இடம்பெற்று வருகின்றது.

நேட்டோ நாடுகளும், அமெரிக்காவும், மேற்கத்தேய நாடுகளும் உக்ரைனுக்கு இராணுவ உதவிகளை வழங்கி வருவதால் உக்ரைனும் ரஷ்யாவை எதிர்த்துத் தாக்குப்பிடித்துப் போரிடுகின்றது.

கடந்த இரண்டு வாரங்களாக உக்ரைன் மீதான வான் தாக்குதல்களை ரஷ்யா தீவிரப்படுத்தியிருந்த நிலையில், வான் பாதுகாப்புச் சாதனங்களை அல்லது ஏவுகணைத் தடுப்பு அமைப்புகளை உக்ரைனுக்கு வழங்க நேசநாடுகள் முன்வர வேண்டும் என்று உக்ரைனின் அதிபர் ஷெலன்ஸ்கி கோரிக்கை விடுத்திருந்தார். நேச நாடுகள் பலவும் ஏவுகணைத் தடுப்புச் சாதனங்களை வழங்குவதற்கு முன்வந்த நிலையில், தடுப்புச் சாதனங்களால் கட்டுப்படுத்தமுடியாத ஹைப்பர்சொனிக் ஏவுகணைகளால் உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தி வருகின்றது.

நவீன சாதனங்களை மையப்படுத்தி இந்தப் போர் நகர்வதாகவும் இது ஆபத்தான அறிகுறி என்றும் போரியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம)

# பேருந்து தீப்பிடித்து பெண்ணொருவர் பலி!

கோலாலம்பூர், ஜன. 16


மலேசியாவின் வடக்கு - தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில், சுற்றுலாப் பயணிகள் பயணித்த பேருந்து தீப்பிடித்து எரிந்ததில், பெண்ணொருவர் உயிரிழந்தார்.

சிங்கப்பூரிலிருந்து புறப்பட்டு மலேசியத் தலைநகர் கோலாலம்பூருக்குச் சென்றுகொண்டிருந்த பேருந்தே இவ்வாறு தீப்பிடித்து எரிந்துள்ளது. பேருந்துடன் மோட்டார்சைக்கிள் ஒன்று மோதியமையே விபத்துக்குக் காரணம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பேருந்தில் தீ விரைவாகப் பற்றிக்கொண்டது. பயணிகள் அலறியடித்து வெளியேறினார்கள். சென்னையைச் சேர்ந்த 17 வயதான பெண்ணொருவர் பேருந்துக்குள் அகப்பட்டுக் கொண்டார். கடும் காயங்களுக்கு உட்பட்ட அவர் சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தார் என்று பொலிஸார் தமது முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பகிரங்கமான வினாத்தாள் மேலுமொருவர் கைது

கொழும்பு, ஜன.16
கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் விவசாய பாடத்தின் இரண்டாம் வினாத்தாள் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்ட சம்பவம் தொடர்பில் மற்றுமொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் நேற்றுக் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

முன்னர் கைது செய்யப்பட்ட ஆசிரியருக்கு சமூக வலைத்தளங்களின் ஊடாக தற்போது கைது செய்யட்ட சந்தேகநபர் வினாத்தாளை அனுப்பினார் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் பரீட்சை நிலையம் ஒன்றில் கடமையாற்றும் ஊழியர் ஒருவரே தற்போது கைது செய்யப்பட்டுள்ளார். (எ-இ)

# கிளிநொச்சியில் அதிகரித்த கால்நடைத் திருட்டுகள்

## நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

கிளிநொச்சி, ஜன.16
கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கனை, பெரியகுளம் ஆகிய இடங்களிலும், தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாகேந்திரபுரம் ஆகிய இடங்களிலும் கால்நடைத் திருட்டு அதிகரித்துள்ளது என்று பொதும... கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

வெள்ள... காரணமாக வீதியோரங்களில் ... டப்படும் கால்நடைகளை, இரவி... ப் ரக வாகனத்தில் வரும் இனந்... ரியாதோர் கடத்திச் செல்கின்றனர் ... றும் பொதுமக்கள் தெரிவிக்கின்ற...

இது தொடர்பாகக் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டும், எவரும் கைது செய்யப்படவில்லை என்று தெரிவிக்கும் கால் நடை உரிமையாளர்கள், இதுவரை 15க்கும் மேற்பட்ட கால்நடைகள் திருடப்பட்டுள்ளன என்றும் அதனால் தங்களின் வாழ்வாதரம் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தனர்.

உரியநடவடிக்கைகளை மேற்கொண்டு கால்நடை திருட்டைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-113)

# போதைக்கு அடிமை; கிராமசேவகர் கைது!

முல்லைத்தீவு, ஜன.16
முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கிராம சேவையாளர் உள்ளிட்ட இருவர் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள். இவர்கள் இருவரும் ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைக்கு அடிமையானவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது .

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய குறித்த இருவரும் நேற்றுக் கைது செய்யப்பட்டிருந்தனர். பின்னர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் மருத்துவப் பரிசோதனைக்காக அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட போதைப்பாவனை தொடர்பான மருத்துவப் பரிசோதனையின் போது குறித்த இரு நபர்களில், கிராம சேவையாளர் ஐஸ்,ஹெரோயின் போதைப்பொருள்களை நுகர்ந்திருந்தார் என்றும், மற்றைய நபர் ஹெரோயினுக்கு அடிமையானவர் எனவும் தெரியவந்துள்ளது. இவர்கள் இருவரும் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-19)

# செ... .19க்கு முன்னர் பா... ப் புத்தகங்கள்!

கொ... ஜன.16
பாட... மாணவர்களுக்கு எதிர்வரும் பெப்ரவரி ... 19ஆம் திகதிக்கு முன்னதாகப் பாடப் புத்த... ள் மற்றும் சீருடைகள் வழங்கப்படும் என்... வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்... ார்.

ஊட... ளுக்குக் கருத்துத் தெரிவித்த கல்வி அமை... , 80 சதவீதமான பாடப்புத்தகங்கள் ஏற்கன... வ அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன... ும் குறிப்பிட்டார். (எ-இ)


# செங்கடலுக்குச் செல்வதற்கு இலங்கை கப்பல்கள் தயார்

கொழும்பு, ஜன.16
செங்கடலில் ஹூத்தி போராளிகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் பயங்கரவாத நடவடிக்கைகளை முறியடிக்கும் நடவடிக்கைகளுக்காக இலங்கை கடற்படையின் விஜயபாகு கஜபாகு கடற்படைக் கப்பல்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.


கப்பல் புறப்படுவதற்கான திகதி மட்டும் வெளியிடப்படவில்லை எனவும், ஒரு கப்பலில் சமார் 100 மாலுமிகள் பணிபுரிகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த கப்பல்கள் உலங்குவானூர்தி தரையிறங்கும் வசதி உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில், காங்கேசன்துறை கடற்கரையில் பட்டப்போட்டி நேற்று இடம் பெற்றது. பலநூறு போட்டியாளர்கள் விழாவில் கலந்துகொண்டனர். (ம-9)



தைத்திருநாளை முன்னிட்டு, வரலாற்றுச் சிறப்புமிக்க நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் பொங்கல் பண்டிகை பக்திபூர்வமாக நேற்று இடம் பெற்றது. (ம-27)




உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தால் தைப்பொங்கலை முன்னிட்டு, 'முதியோரை பேணுவோம் முதுமையை போற்றுவோம்' என்னும் தொனிப்பொருளில் மானிப்பாய் முதியோர் இல்லத்தில் உள்ள முதியோர்களுக்கு புத்தாடைகள் வழங்கப் பட்டன. (ம-125)

தையிட்டி கலைமகள் சனசமூக நிலையத்தின் பொங்கல் விழாவும் மாணவர் மதிப்பளிப்பு நிகழ்வும், நிலைய முன்றிலில் நிலையத்தலைவர் மு.தேவராஜா தலைமையில் நடைபெற்றது. விழாவுக்கு முதன்மை விருந்தினராக தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் திருமதி சு.சிவகங்கா கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் செயலாளர் சு.சுதர்சன், கௌரவ விருந்தினராக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (ம-9)





தைப்பொங்கல் தினமான நேற்றுத் திங்கட்கிழமை குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தில் தைப்பொங்கல் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. (ம-66)



யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில், மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவக்கலாநிதி த.சத்தியமூர்த்தி தலைமையில் நேற்று பொங்கல் விழா இடம்பெற்றது. (ம-66)

வவுனியா குட்செட்வீதி கருமாரி அம்மன் ஆலயத்தின் பொங்கல்விழா நேற்றுச் சிறப்பாக இடம்பெற்றது. தேசிய ஆக்கத்திறன் போட்டிகளில் திறன்களை வெளிப்படுத்திய ஸ்ரீ கருமாரியம்மன் அற நெறிமாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (ம-110)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# பணம் எடுக்க உதவுவதாக 2 லட்சம் ரூபா மோசடி!

கொழும்பு, ஜன.16

ஏ.ரி.எம். அட்டையை மாற்றிக் கொடுத்து சுமார் 2 இலட்சம் ரூபா பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டில் முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தியத்தலாவையில் நடந்துள்ளது. சந்தேகநபர் ஏ.ரி.எம். இயந்திரத்தில் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு உதவி செய்வதாகக் கூறி, பெண்ணொருவரின் அட்டையைப் பெற்று, பின்னர் மற்றுமோர் அட்டையை மாற்றிக் கொடுத்து பணத்தை மோசடி செய்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. பாதிக்கப்பட்ட பெண், தியத்தலாவை பொலிஸில் முறைப்பாடு செய்ததன் பின்னர் விரைந்து செயற்பட்ட பொலிஸார் சந்தேகநபரை மடக்கிப்பிடித்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(எ-இ)

## மரண அறிவித்தல்



### கமலாம்பிகை சண்முகநாதன்

(IS Teacher)

604, நாவலர் வீதி, அரியாலையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட வாலம்பிகை சண்முகநாதன் அவர்கள் நேற்று (15.01.2024) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இளையதம்பி சோமசேகரம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற IS சண்முகநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், இராசையா, துரைச்சாமி, தியாகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான அருமைரத்தினம், தங்கலட்சுமி, புவனேஸ்வரி, குணபூசனம் மற்றும் அருளம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2024) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 03.00 மணியளவில் தகனக்கிரியைக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

604, நாவலர் வீதி,
அரியாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 27674) S-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
16.04.1932

மறைவு
15.01.2024



### சீவரத்தினம் தெய்வானைப்பிள்ளை

யாழ்ப்பாணம் கோப்பாய் இலகடியைப் பிறப்பிடமாகக் கொண்ட சீவரத்தினம் தெய்வானைப்பிள்ளை நேற்று (15.01.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அப்பாப்பிள்ளை பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், அமரர் சீவரத்தினத்தின் அன்பு மனைவியும், கதிர்காமநாதன், உருத்திரநாதன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், அமரர் சீவமணி, கமலாதேவி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், துஸ்யந்தன் (ஜேர்மனி), புஸ்பராகவன் (பிரான்ஸ்), கிருத்திகா (கோப்பாய்), இன்பராஜ் (ஜேர்மன்), தேனுகா (ஜேர்மன்), ஜீவராஜ் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
077 271 9559, 077 459 9535

(CS 27673) S-1

## தவறிவிட்டது

சிரோஜன் நகுலேஸ்வரன் என்பவரின் சாரதி அனுமதிப் பத்திரம், பணம் மற்றும் ஆவணங்கள் அடங்கிய **பேர்ஸ்** ஒன்று, நேற்று (15.01.2024) திங்கட்கிழமை கல்வியங்காடு - திருமகள் வீதி, கனகரட்ணம் வீதி, ஆடியபாதம் வீதி மற்றும் திருநெல்வேலி பகுதிக்குள் தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தந்துதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு - **077 343 8260**
முகவரி - கலாசாலை வீதி, பாரதிபுரம், திருநெல்வேலி.

(CR 41562) S-1

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
10
04
1932



மறைவு
27
01
2023

### அமரர் குமாரசிங்கம் தங்கம்மா

மண்ணுலகில் பிறந்து நிறைவாய்
வாழ்ந்து மஞ்சத்தடி முருகன் பாதார
விந்தத்தை மகிழ்வுடன் பற்றி பிடித்து
ஷஷ்டி திதியதனில் இறைவனுடன்
இரண்டறக் கலந்த
அப்பம்மாவின் நினைவுடன்
சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

குமாரலிங்கம் வீதி,
இணுவில் கிழக்கு,
மஞ்சத்தடி.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

(cs.53526) (N.1)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்
03.01.1967



இறைவன் அடியில்
17.12.2023

### அமரர் நாகையா புவனேஸ்வரன் (துயா)

கடந்த (17.12.2023) ஞாயிற்றுக்கிழமை அன்று
இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவரின்
வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (16.01.2024)
செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

எத்தனை பேர் நான் இருக்கிறேன் என்று சொன்னாலும்
உங்கள் இடத்தை நிரப்ப யாராலும் முடியாது
எத்தனை உறவுகள் எம் அருகில் இருந்தாலும்
நாம் தேடும் ஒரே உறவு நீங்கள் மட்டுமே - ஏனென்றால்
எமக்கு நீங்கள் உறவு மட்டும் இல்லை - எங்கள்
உயிர் அப்பா.

இலட்சுமி வாசம்,
குமரகோட்டம்,
கோண்டாவில்.

உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

(CS 27672) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 27 . 11 . 1941



இறைவன் அடியில் 14 . 01 . 2024

### சரவணமுத்து இராசநாயகம்

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும், திருகோணமலை சிவயோகபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து இராசநாயகம் கடந்த (14.01.2024) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து மகேஸ்வரி தம்பதியரின் புதல்வனும், சுலோசானா அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்லப்பா ரத்தின சுலோணமணி அவர்களின் மருமகனும், சுரேஸ் (பிரான்ஸ்), சிலோசினி, துஷ்யந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜானகி சூரியவிந்தன், கமலினி ஆகியோரின் அன்பு மாமனாரும், டன்சிகா, வின்சிகா, ஜனிகிசன், மதுனிகா, அஷானி, கர்சினி, அஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2024) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் அன்புவழிபுரம் பொது மயான தகனசாலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

இல.35, சிவயோகபுரம்,
கன்னியா வீதி,
திருகோணமலை.

தகவல்:
குடும்பத்தினர்.
0777 294 6841

(CS 53533) N-1

## மரண அறிவித்தல்



### கந்தையா கந்தசாமி

(ஓய்வுபெற்ற நில அளவையாளர்)

தோற்றம் 10.06.1931 — மறைவு 14.01.2024

யாழ். சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் அராலி மேற்கு, வட்டுக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா கந்தசாமி கடந்த (14.01.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா சிவகாமி தம்பதியரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2024) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூநாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி மேற்கு,
வட்டுக்கோட்டை.

(cs.53531) (n.1)


தகவல்:
குடும்பத்தினர்
077 831 4155

## 62 சதவீதம் உயர்ந்தது அரச வரி வருமானம்!

பெறுமதிசேர் வரி அதிகரிப்புக் காரணமாக கடந்த ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் அரசாங்கத்தின் வருமானம் 62.6 வீதம் அதிகரித்து 505 பில்லியன் ரூபாவாக உயர்ந்துள்ளது என்று நிதி அமைச்சகம் வெளியிட்டுள்ள நிதி நிர்வாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளில் பெறுமதி சேர் வரி வருமானம் 81.4 வீதமாக அதிகரித்து 351.6 பில்லியன்ரூபாவாகக் காணப்பட்டது. அந்தக் காலப் பகுதியில் இறக்குமதியில் பெறுமதிசேர் வரி வருமானம் 31.5 வீதம் அதிகரித்து 153.4 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-இ)

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 04 . 1944



மறைவு 13 . 01 . 2024

### ஐயாத்துரை அரசபிள்ளை

(ஓய்வுபெற்ற ஊழியர் கைதடி முதியோர் இல்லம்)

G.P.S. றோட், கல்வியங்காட்டினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை அரசபிள்ளை கடந்த (13.01.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வைரவநாதன் வேலாயுதபிள்ளை, இராசமணி மற்றும் அன்னமுத்து, இராசம்மா ஆகியோரின் சகோதரனும், கமலதாசன், கல்யாணி, அரவிந்தன் ஆகியோரின் தந்தையும், சயிலா, சண்முகராகவன் ஆகியோரின் மாமனாரும், ஜெனிசா, ஜெய்சன், பிரவீனா, பிரணவி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
குடும்பத்தினர்.
கமலன் - 074 101 7810
கல்யாணி - 077 369 6402
அரவிந்தன் - [illegible]

G.P.S. றோட்,
கல்வியங்காடு

(CS53537) N-1

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 04 . 08 . 1952



மறைவு 27 . 01 . 2023

### அமரர் சுந்தரம் சிவலிங்கம்

(முன்னாள் பொது முகாமையாளர் - திருவையாறு பலநோக்கு கூட்டுறவு சங்கம் மற்றும் கட்டட பொருட்கள் கூட்டுத்தாபனம்)

திதி: தைமாத வளர்பிறை சஷ்டி (16.01.2024)

மண்ணுலகில் பிறந்து மண்ணுலக வாழ்வில்
குலவிளக்காய் திகழ்ந்து
எல்லோரின் உயர்விற்காய் பாடுபட்டு
பார்போற்ற வாழ்ந்த எம்முயிர்த்தெய்வமே
விண்ணுலகம் சென்று ஓராண்டு ஆனாலும்
உங்கள் பிரிவுத்துயர் எம் நெஞ்சைவிட்டு
அகலவில்லை. நீங்காத நினைவுகளுடன்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

புகையிரத வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(CS53534) (N.1)

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ராஜபக்சக்கள் சகவாசம் வேண்டவே வேண்டாம்!

### ஜயரத்ன எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜன.16

செத்து மடிந்தாலும் பரவாயில்லை, இனி ஒருபோதும் ராஜபக்சக்களுடன் இணைந்து அரசியல் செய்யப்போவதில்லை என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான பிரியங்கர ஜயரத்ன தெரிவித்தார்.

புத்தளத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாடு வங்குரோத்து அடைந்துள்ளது. அதற்கு நாமும் பொறுப்புக்கூறவேண்டும். கோத்தபாய ராஜபக்சவுக்காக வாக்குத் திரட்டியது கவலையளிக்கின்றது. அவர் உரிய முடிவுகளை எடுக்கவில்லை. ராஜபக்சக்களுடன் இனி அரசியல் பயணத்தைத் தொடரப்போவதில்லை என்றார்.

அதேவேளை, பிரியங்கர ஜயரத்ன தற்போது, ரணில் ஆதரவு அணியில் இடம் பிடித்துள்ளார். (எ-44)

## சடலம் மீட்பு!

கொழும்பு, ஜன.16

களுத்துறை - பயாகலை பிரதேசத்தில் கடற்கரையில் இருந்து இளைஞர் ஒருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பயாகலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர் கடலில் நீராடிக்கொண்டிருந்த போது நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இவர் நேற்றுமுன்தினம் தனது பாட்டியின் வீட்டுக்குச் செல்வதாகக் கூறி வீட்டிலிருந்து புறப்பட்ட நிலையில் காணாமல் போயிருந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம்தொடர்பானமேலதிகவிசாரணைகளை பயாகலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-இ)

## வவு. மருத்துவமனையில் குருதிக்குத் தட்டுப்பாடு!

வவுனியா, ஜன.16

வவுனியா மாவட்டப் பொது மருத்துவமனையில் குருதித் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனவே குருதிக் கொடையாளர்கள் குருதி வழங்க முன்வரவேண்டும் என்று மருத்துவமனை நிர்வாகம் கோரிக்கை விடுத்துள்ளது.

மருத்துவமனை இரத்தவங்கியில் உள்ள சில குருதி வகைகள் சில வாரங்களில் முடிவடையும் நிலைமை உள்ளது. முக்கியமாக எதிர்மறை இரத்தவகைகளுக்குக் கூடுதல் தட்டுப்பாடு நிலவுகின்றது. எனவே குருதிக் கொடையாளர்கள் குருதி வழங்க முன்வரவேண்டும் என்றும் மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது. (எ-110)





எதிர்காலத்திற்கு பெறுமதி வாய்ந்த நல்வாழ்த்து!

நாட்டின் ஊக்கமிக்க பிள்ளைகளின் கனவுகள் வெற்றியடையும் வேளை அன்பார்ந்தவர்களின் ஒவ்வொரு பாசமிக்க அரவணைப்பிலும் இருப்பது அன்பான வாழ்த்துக்களே.

எட்டுத்திக்கும் ஒலிக்கும் நல்வாழ்த்துக்களுக்கு மத்தியில் ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் லைஃப் வழங்கும் சுப பெத்தும் புலமைப்பரிசில் ஆனது, சிறப்புர சித்தியடைந்த எமது நாட்டின் ஊக்கமிக்க பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு வழங்கக்கூடிய பெறுமதிமிக்க நல்வாழ்த்தாகும்.

300 சுப பெத்தும் புலமைப்பரிசில்கள்

2021 ஆம் ஆண்டின் கா.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சிறப்புர சித்தியடைந்த பிள்ளைகளுக்கு 75 சுப பெத்தும் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.

2022 ஆம் ஆண்டின் தரம் 5 புலமைப்பரிசில், கா.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் சிறப்புர சித்தியடைந்த பிள்ளைகளுக்கு 225 சுப பெத்தும் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.

சுப பெத்தும் புலமைப்பரிசிலுக்கான தகைமையை பெறுவதற்கு ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் லைஃப் காப்புறுதி ஒப்பந்ததாரர்களுக்கு www.srilankainsurance.com ஊடாக இப்போது விண்ணப்பிக்க முடியும்.

Company Registration Number - PB 286362

ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் லை.்.ப் ஆயுள் காப்புறுதி ஒப்பந்ததாரர்களின் பிள்ளைகளுக்கு

| தரம் 5 புலமைப்பரிசில் | க.பொ.த. சாதாரண தரம் | க.பொ.த. உயர் தரம் |
|---|---|---|
| வருடாந்தம் ரூ. 20,000 வீதம் 5 வருடங்கள் | வருடாந்தம் ரூ. 40,000 வீதம் 2 வருடங்கள் | வருடாந்தம் ரூ. 50,000 வீதம் 3 வருடங்கள் |

2024 பெப்ரவரி 15ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.
விண்ணப்பதாரர்களில் தேர்ந்தெடுக்கப்படும் சிறப்பு வெற்றியாளர்களுக்கு சுப பெத்தும் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.
மேலதிக தகவல்களுக்கு உங்கள் காப்புறுதி ஆலோசகர் அல்லது 0112 357 357 அழையுங்கள்.

SLIC LIFE

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது.


## கட்டாக்காலி எருமைகளால் மன். மக்கள் அசௌகரியம்

### கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

மன்னார், ஜன.16

மன்னார் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பல கிராமங்களில் கட்டாக்காலி எருமை மாடுகளின் நடமாட்டம் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன. அதனால் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கவேண்டியுள்ளது என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.

மன்னார் பிரதான பாலம் ஊடாக மன்னார் நகரப் பகுதிக்குள் கூட்டமாக வரும் எருமை மாடுகள் ஜிம்றோன் நகர், எழுத்தூர், எமில் நகர், சாந்திபுரம் போன்ற கிராமங்களுக்குச் செல்கின்றன. அவை வீடுகளின் சுற்றுவேலிகளைச் சேதப்படுத்துவதுடன், பயன்தரு மரங்களையும் அழிக்கின்றன. வீதியில் செல்லும் மக்களையும் அச்சுறுத்துகின்றன.

இது தொடர்பாக மன்னார் நகரசபைக்குத் தெரியப்படுத்தியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதிகாரிகள் உரிய நடவடிக்கை மேற்கொண்டு கட்டாக்காலி கால்நடைகளின் உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். கட்டாக்காலி எருமை மாடுகளை



கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறப்பர் பட்டி இறுக்கி 9 வயதுச் சிறுவன் சாவு!



கலவான, பொதுபிட்டிய, பனாபொல பிரதேசத்தில் ஒன்பது வயதுச் சிறுவன் இறப்பர் பட்டி கழுத்தில் இறுகியதில் உயிரிழந்துள்ளார். நான்காம் வகுப்பில் கல்வி கற்கும் சிறுவன் ஒருவனே உயிரிழந்துள்ளான்.

சிறுவன் சிறுவயது முதலே பொழுதுபோக்காக இரும்பு சுத்தியல், இரும்புக் கம்பிகளில் இறப்பர் பட்டியைக் கட்டி சுழற்றி விளையாடி வருவதையும் வழக்கமாகக் கொண்டுள்ளார். சம்பவ தினத்தன்றும் சிறுவன் அவ்வாறே விளையாடியுள்ளான். பெற்றோர் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தபோது, முற்றத்தில் விளையாடுவதற்காக சிறுவன் சென்றுள்ளான். கற்களை உடைப்பதற்குப் பயன்படுத்தப்படும் உளி யில் இறப்பர் பட்டியைக் கட்டி விளையாடும்போது இரும்பு உளி தலையில் பல மாக மோதியதுடன் இறப்பர் பட்டி கழுத்தை நெரித்துள்ளது. சுமார் அரை மணி நேரத்துக் கும் மேலாக முற்றத்தில் சிறுவன் மயங்கிய நிலையில் இருந்துள்ளான். சிறுவனைப் பார்த்த அயலவர்கள் அதுபற்றி பெற்றோருக்குத் தெரிவித்ததையடுத்தே அவர்களுக்கு நடந்த விடயம் தெரியவந்துள்ளது. பொத்துபிட்டிய மருத்துவமனைக்குக் கொண்டுவரப்பட்ட சிறுவன், மேலதிக சிகிச்சைக்காக கலவானை மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளான். பொத்துபிட்டிய பொலிஸார் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-இ)


## அம்மாவின் விண்ணக வாழ்வில் 20 ஆம் ஆண்டு



இறப்பு
16.01.2004

### திருமதி லில்லி தேவசகாயம்

மனிதருள் மாணிக்கமாய் அன்பு நிறை
பேரொளியாய் இன்சொல் பேசி

அன்போடும் பாசத்தோடும் எம்மைப்
பேணிக்காத்து நேசத்துடன் இன்முகம்
காட்டி நல்வழிப்படுத்தி இவ்வுலகில்
நாம் வாழ

நல்லனவெல்லாம் செய்த எம் அம்மாவை.
என்றும் மறப்போமா எம் வாழ்வில்
அல்லேலூயா
அல்லேலூயா

இல.28, றக்கா லேன்,
சுண்டுக்குளி.

அன்பு பிள்ளைகள், மருமக்கள் ,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## சமையலாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் சாப்பாட்டுக்கடை ஒன்றினை
நடத்தக்கூடிய சமைக்கத் தெரிந்த
ஆண்/ பெண் தேவை.

**077 330 7073**

## வீடுகளுக்கு வந்து கற்பித்தல் ஆங்கில/ தமிழ் மொழிமூலம்

ஆங்கிலம்/ கணக்கீடு/புவியியல்/
குடியுரிமை / வரலாறு
அனைத்துத் தரங்களுக்கும்
சிங்களம் - சிறியதரங்களுக்கு

தொடர்பு : 077 331 6402

## மு/புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம் (வ.து)
## பகிரங்க ஏலவிற்பனை


மு/புதுக்குடியிருப்பு ப.நோ.கூ. சங்கத்தின் கோம்பாவில் களஞ்சியக் காணியில் உள்ள 3 பெரிய வேப்ப மரங்கள் பகிரங்க ஏலவிற்பனை மூலம் 2024.01.24 ம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கோம்பாவில் களஞ்சியக் காணியில் விற்பனை செய்யப்படவுள்ளது. 3 வேப்ப மரங்களின் அடிப்படை விலை ரூபா 120000.00 ஆகும். எனவே இவ் வேப்ப மரங்களை ஏலவிற்பனை மூலம் பெறவிரும்பினால் மீளளிக்கப்படாத தொகை ரூபா 500.00 இனை செலுத்தி பகிரங்க ஏலவிற்பனையில் கலந்துகொள்ள முடியும், என்பதையும் மேலதிக விபரங்களை தலைமைப் பணிமனையில் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் என்பதையும் அறியத்தருகின்றேன்.

தலைவர்,
மு/புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம்,
புதுக்குடியிருப்பு

(cr.41540) (N.1)

## மரண அறிவித்தல்

பிறப்பு
23 • 10 • 1943



இறப்பு
12 • 01 • 2024

### செல்லையா மகேஸ்வரமூர்த்தி
(ஓய்வுபெற்ற குடியேற்ற அதிபர்)

காளி கோவிலடி குப்பிளான் வடக்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் தெற்கை வசிப்பிடமாகவும். இருபாலை டச்சு வீதியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா மகேஸ்வரமூர்த்தி கடந்த (12.01.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மகனும். காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும். கமலாதேவியின் (சாந்தா) அவர்களின் அன்புக் கணவரும். ரமேஷ் (ஜேர்மனி). மதன் (சுவீடன்). ஜனனி ஆகியோரின் அன்புத் தந்தையும். துசி (ஜேர்மனி). லலிதா ஆகியோரின் அன்பு மாமனாரும். அஜிந். ரித்திகன். அபிர்தன் ஆகியோரின் அன்புப் பேரனும். இந்திராணி பாலசுப்பிரமணியம். கெங்காதரன். காலஞ்சென்ற சிவநேசன் அசோகவதி. பாலச்சந்திரன். காலஞ்சென்ற பிறேமா. வெற்றிவேல். குகனேசன் மற்றும் ரஞ்சன் ஆகியோரின் அன்புச் சகோதரரும். சிவமலர் ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.01.2024) புதன்கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இருபாலை செக்கடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தொடர்பு:
ம.ரமேஷ் - 077 824 1140
மதன் - 074 049 2575

தகவல்:
குடும்பத்தினர்

(cs.53535) (n.1)

## மரண அறிவித்தல்

தோற்றம்
30 • 03 • 1936



மறைவு
15 • 01 • 2024

### இளையதம்பி செல்வராசா
(இளைப்பாறிய மருந்துக்கலவையாளர்)

காளியானை புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும், மாசுவன் நீர்வேலி மேற்கை வதிவிடமாகவும் கொண்ட இளையதம்பி செல்வராசா நேற்று (15.01.2024) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட மகனும், செல்லப்பா அன்னபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், தங்கம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, தில்லைநாதர், அன்னலட்சுமி, நவமணி, இராசரத்தினம் ஆகியோரின் சகோதரனும், கிருஷ்ணபவான் (லண்டன்), தேவகி (ஆசிரியை, யா/தேவரையாளி இந்துக் கல்லூரி), ரேவதி (ஆசிரியை, யா/நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை), லோகானந்தன் (லண்டன்), நித்தியானநந்தன் (லண்டன்) ஆகியோரின் தந்தையும், சுகிர்தா (லண்டன்), யோகேந்திரன் (ஆசிரியர், யா/பொலிகண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை), குமரசிறி (ஆசிரியர், யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்), சுகன்யா (லண்டன்), நுருட்ஜலா (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், துஷானி, ஜனோஜன், தனுஷன், வேணுஷன், மதுர்ஷன், கவிஷாயினி, கலையரசி, எழிலவன், நிலக்ஷி, லக்ஷன், சௌமி, ஆதூரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.01.2024) புதன்கிழமை மு.ப 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் மு.ப 11.00 மணியளவில் தகனக்கிரியைக்காக சீயாக்காடு இந்த மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

மாசுவன், நீர்வேலி 077 977 3551, +447916318542

(CS 27871) S-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதித் தேர்தலில் அரகலய சார்பில் பொதுவேட்பாளர்!

கொழும்பு, ஜன.16

மக்கள் போராட்டக்குழுவின் (அரகலய) சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவதற்கான கலந்துரையாடல்கள் தீவிரமாக இடம்பெற்றுவருகின்றன.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளராகவும், காலிமுகத்திடல் போராட்டத்தில் முன்களப் போராளியாகவும் செயற்பட்ட வசந்த முதலிகேவைக் களமிறக்க அவரின் வயது தடையாக இருப்பதால், அவரின் ஆதரவு பெற்ற ஒருவரைக் களமிறக்கவேண்டும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மக்களின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகாவை அரகலயவின் பொதுவேட்பாளராகக் களமிறக்கவேண்டும் என்ற பரிந்துரையும் முன்வைக்கப்பட்டுள்ளது. அடுத்துவரும் நாட்களிலும் இது தொடர்பான கலந்துரையாடல்கள் தொடரவுள்ளன. (அ-44)

## சுகாதார நிபுணர்கள் சங்கம் இன்று பணிப்புறக்கணிப்பு!

சுகாதார நிபுணர் சங்கங்கள் இணைந்து இன்று செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணி முதல் அடையாள பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை முன் னெடுக்கத் தீர்மானித்துள்ளன.

மருத்துவர்களுக்கு அரசாங்கம் வழங்கத் தீர்மானித் துள்ள 35 ஆயிரம் ரூபா மேலதிக கொடுப்பனவை தங்களுக்கும் வழங்கவேண்டும் என்று சுகாதார நிபுணர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தப் போராட்டத்தில் மருத்துவ ஆய்வுகூட நிபுணர்கள், கதிரியக்கத் தொழில்நுட்ப நிபுணர்கள், மருந்தாளர்கள், தாதியர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்ப நல சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் அம்புலன்ஸ் ஊழியர்கள் உள்ளிட்ட 75 தொழிற்சங்கங்கள் இணைந்து கொள்ளவுள்ளன.

இதேவேளை - சுகாதார நிபுணர் சங்கங்களின் வேலைநிறுத்தத்தை முறியடிக்க இராணுவத்தினரைப் பயன்படுத்தினால், தொழிற்சங்கப் போராட்டத்தை மேலும் விஸ்தரிப்போம் என சுகாதார நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார். (எ-இ)

### தொலைக்காட்சிப் பெட்டி

## பாடசாலையில் களவு; சந்தேகநபர் கைது

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் ஏ-9 வீதியில் அமைந்துள்ள பிரமண்டு வித்தியாலயத்தில் திறன் வகுப்பறையின் பூட்டு உடைக்கப்பட்டு பல இலட்சம் ரூபா பெறுமதியான தொலைக்காட்சியொன்று அண்மையில் களவாடப்பட்டிருந்தது. இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவரை வவுனியா பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

பாடசாலையில் இடம்பெற்ற இத் திருட்டுச்சம்பவம் தொடர்பில் பாடசாலை அதிபர் வழங்கிய முறைப்பாட்டினையடுத்து, தீவிர விசாரணையில் பொலிஸார் இறங்கினர். பாடசாலைக்கு அருகில் உள்ள சில வர்த்தக நிலையங்களில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. காணொலிகளின் மூலம் தொலைக்காட்சியினைக் களவாடியவரைப் பொலிஸார் இனங்கண்டனர். அத்துடன் களவாடிய தொலைக்காட்சியை சந்தேகநபர் வவுனியா நகரில் உள்ள வர்த்தக நிலையமொன்றுக்கு விற்பனை செய்தவிடயமும் கண்டறியப்பட்டது. இதனையடுத்து துரிதகதியில் செயற்பட்ட பொலிஸார் சந்தேகநபரைக் கைது செய்தனர். (அ-110-18)

### ரணிலின்...

அங்கு 12 நாள்கள் தங்கவுள்ளார். இதனால் ரணில் வசமிருந்த பாதுகாப்பு அமைச்சு, இராஜாங்க அமைச்சர் பிரமித்த தென்னக்கோனுக்கு தற்காலிகமாக வழங்கப்பட்டுள்ளது. அடுத்துவரும் 12 நாள்களும் பதில் பாதுகாப்பு அமைச்சராக தென்னக்கோன் செயற்படுவார். (அ-1)

### பொன்சேகாவுக்கு...

வேறு கட்சிகளில் இருந்து ஐக்கிய மக்கள் சக்திக்கு கட்சிதாவி வருவோர் அனைவருக்கும் சஜித் பிரேமதாஸ முக்கியத்துவம் கொடுப்பதும், அவர்களுக்குப் பதவிகளை வழங்குவதும் சரத் பொன்சேகா தரப்புக்கு பெரும் அதிருப்தியை உண்டு பண்ணியுள்ளது. அத்துடன் பொன்சேகா 'அரகலய' போராட்டக்குழு சார்பாக பொதுவேட்பாளராவதற்கான முயற்சிகளையும் திரைமறைவில் மேற்கொண்டுள்ளார். இந்தக் காரணங்களின் அடிப்படையில் அவர் விரைவில் சஜித் அணியிலிருந்து பிரிந்து தனிவழி செல்லவுள்ளார் என்று கூறப்படுகின்றது.

இந்தநிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவோடு இணைந்து அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடவும், தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும் முயற்சிக்கு ஆதரவளிக்கவும் சஜித் பிரேமதாஸ பச்சைக்கொடி காட்டிவிட்டார் என்றும் கூறப்படுகின்றது. எனினும் சஜித்தும், ரணிலும் கொள்கையளவிலேயே இணைந்து செயற்படுவர் என்றும், கட்சி ரீதியாக ஒன்றுபடுவது குறித்து இன்னமும் முடிவெடுக்கப்படவில்லை என்றும் தெரியவருகின்றது.

பொதுஜன பெரமுனக் கட்சி அண்மைக் காலமாக ஜனாதிபதி ரணிலுக்குக் கடும் குடைச்சல் கொடுத்து வருவதுடன், அவரைப் பொதுவெளியிலும் தரக்குறைவாக விமர்சித்து வருகின்றது. குறிப்பாக பஸில் ராஜபக்ச தரப்பினரே ரணிலுக்குச் சேறுபூசும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். இந்தநிலையிலேயே சஜித்துடன் இணைந்து பயணிக்க ரணில் விக்கிரமசிங்க முடிவெடுத்துள்ளார் என்று கூறப்படுகின்றது. அதேவேளை, ரணிலை சஜித் அணியோடு இணையவிடாமல் பெரமுனவோடு இணைந்து தொடர்ந்து செயற்பட வைக்க மஹிந்த ராஜபக்ச தலைமையில் எம்.பி.க்கள் சிலர் தீவிர முயற்சியில் இறங்கியுள்ளனர் என்றும் தகவல்கள் வெளிவந்துள்ளன. (அ-1)

### இமாலயப்...

களால், வவுனியாவில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

அதன்பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

இதன்போது அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

"இமாலயப் பிரகடனம்" என்ற காலாவதியான கருத்தையும் ஒற்றையாட்சியையும் ஊக்குவிப்பதை விட, பொதுவாக்கெடுப்பை ஆதரிக்கவும், தமிழர்களுக்கு சுயநிர்ணயவாய்ப்பை வழங்குமாறும் சுவிஸ் ஜனாதிபதி வயோலா அம்ஹெர்ட்டை நாங்கள் கோரி நிற்கின்றோம். 'இமாலயப் பிரகடனத்தில்' பௌத்த குருமார்கள் பங்கேற்பதற்கு சுவிட்ஸர்லாந்து நிதியுதவி அளித்தது.

ஜனாதிபதி அம்ஹெர்ட் அம்மையார், 'இமாலயப் பிரகடனத்துக்கு' நிதி உதவி வழங்குவதை நாம் எதிர்க்கிறோம். இந்தப் பிரகடனம் பன்மைத்துவ சமூகத்துடன் கூடிய ஒற்றையாட்சி அரசை உருவாக்க முயல்வதுடன், பெரும்பான்மையினத்தவருக்கே சாதகமாக அமையும். சுவிஸ் மற்றும் பிற அரசாங்கங்கள் செல்வாக்குமிக்க தமிழ்க் குழுக்களைப் பல வீனப்படுத்துவதற்கு பங்களிக்கும் சில அரச சார்பற்ற நிறுவனங்களை ஆதரிக்கின்றன. இதன் விளைவாக, இந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் போர்க்குற்றங்கள் மற்றும் தமிழர் அபிலாஷைகளுக்கான சர்வதேச நீதி பற்றிய விவாதங்களை மறைக்கின்றன.

'நல்லிணக்கம்' என்றழைக்கப்படுவதை நாங்கள் நம்பவில்லை, ஏனெனில் இது தமிழர்களின் நிலங்களை அபகரிக்கும் ஒரு மாறுவேட முயற்சியாகத் தெரிகிறது. அரசியல் தீர்வு காண்பதில் தமிழர்களில் எவரும் ரணிலையோ அல்லது எந்தச் சிங்களத் தலைவரையும் நம்புவதில்லை. கடந்த 75 வருடங்கள் இதற்கான தெளிவான சான்றுகளை வழங்குகின்றன.

இலங்கையில் வசிக்கும் தமிழ் மக்களுக்கும், போரினால் இடம்பெயர்ந்த மக்களுக்கும் இடையே பொதுவாக்கெடுப்பு நடத்த சுவிஸ் வளங்களை ஒதுக்குமாறு சுவிட்ஸர்லாந்து ஜனாதிபதியிடம் வலியுறுத்துகிறோம்.

செழுமையான தமிழ்க் கலாசாரத்தையும், அதன் அடையாளங்களையும், மொழியையும், வடக்குக் கிழக்கில் உள்ள எமது பூர்வீக நிலங்களையும் அழிக்க முயலும் சதி நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு சுவிஸ் அரசு முயற்சி எடுக்கவேண்டும்" - என்றனர். (அ-110)

### மொட்டு...

வரை நிறுத்தாமல் இருப்பதற்கும் வாய்ப்பு உள்ளது என்று அந்தக்கட்சியின் தலைவரான மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் விசேட கூட்டமொன்று நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றது.

இந்தக்கூட்டத்தின்பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே மஹிந்த ராஜபக்ச மேற்கண்டவாறு கூறினார்.

" ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய வேட்பாளர், அவரை ஆதரிப்பது தொடர்பில் நாம் இன்னும் முடிவு எடுக்கவில்லை. எமது கட்சி வேட்பாளர் ஒருவரை நிறுத்தலாம் அல்லது நிறுத்தாமலும் விடலாம்." எனவும் மஹிந்த ராஜபக்ச குறிப்பிட்டார் .

அதேவேளை, சிறிலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் என்று ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். இதனால் கடைசி நேரத்தில் பொதுஜன பெரமுன தனது மொட்டுச் சின்னத்தில் எவரையும் களமிறக்காமல் ரணிலுக்கு ஆதரவு தெரிவிக்கக்கூடும் என்ற ஊகங்கள் எழுந்துள்ளன. (அ- 44)

### வானில்...

யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறையில் தைப்பொங்கலை முன்னிட்டு வருடாந்தம் நடைபெறும் பட்டப்போட்டியிலே, 'வற்' என்ற வாசகத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்தக் 'கிண்டல் பட்டம்' பறக்கவிடப்பட்டது. 'வற்'வரி விதிப்பால் விலைவாசி வானை எட்டிவிட்டதைக் குறிக்கும் வகையில் இந்தப் பட்டம் பறந்ததால், மக்கள் பலரும் இந்தப் பட்டத்தைப் பார்த்துச் சிரித்து மகிழ்ந்தனர். அத்தோடு இந்த 'வற்'பட்டம் சமூக வலைத்தளங்களிலும் பரவலாகப் பகிரப்பட்டது. (அ-1)

### தயாசிறி...

யில் விரைவில் இணையவுள்ளனர்.

இவ்விருவரும் தனித்தனியாக இரு அமைப்புகளைக் கட்டியெழுப்பியுள்ளதுடன், அந்த அமைப்புகளின் சார்பிலேயே சஜித்தின் கூட்டணியில் சங்கமிக்கவுள்ளனர்.

இதற்கான பேச்சுகள் ஏற்கனவே இடம்பெற்றிருந்தாலும் தேர்தல் களம் சூடுபிடிக்கும்நேரத்தில் இவ்விருவரும் இணைந்தால் அது திருப்பமாக அமையும் என்பதால் சங்கமிப்புக்கான உறுதியான நாள் இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை.

கூட்டணியின் சார்பில் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் தயாசிறி ஜயசேகர குருநாகல் மாவட்டத்திலும், பொலநறுவையில் இருந்து ரொஷான் ரணசிங்க கொழும்பிலும் களமிறங்குவார்கள் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசிய நல்லிணக்கத் தைப்பொங்கல் விழா காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தில் நேற்றுத் திங்கட்கிழமை தேசிய ஒருமைப்பாட்டு நல்லிணக்க அலுவலகப் பணிப்பாளர், கந்தசாமி கருணாகரனின் ஒருங்கிணைப்பில் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது. (ம-20)

உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தால் தைப்பொங்கலை முன்னிட்டு, 'முதியோரைப் பேணுவோம் முதுமையை போற்றுவோம்' என்னும் தொனிப்பொருளில் மானிப்பாய் முதியோர் இல்லத்தில் உள்ள முதியோர்களுக்கு புத்தாடைகள் வழங்கப்பட்டன. (ம-125)





தேசிய மற்றும் மாகாணப் போட்டிகளில் சாதனைவீட்டிய புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவின்விளையாட்டு வீரர்கள் மற்றும் பயிற்சியாளருக்கான கௌரவிப்பு நிகழ்வு கடந்த வாரம் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ச-75)


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி A9 வீதியுடன் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- நிலப்பரப்பு
- நல்ல சூழல் நன்னீரூற்று
- நாவற்குழிச் சந்தியிலிருந்து 3/4 Km
- வடமாகாண சபை 300m
- கைதடிச் சந்தி 1Km மெயின்றோட்டுடன் உள்ளது
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

(CS 53536) S-1

**076 788 0591**




வடக்கு மாகாண சமூக சேவை திணைக்களத்தால் வழங்கப்பட்ட மாற்றுவலுவுடையோருக்கான கருவிகளை நல்லூர்ப் பிரதேச செயலாளர் திருமதி யசோதா உதயகுமார் அண்மையில் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கினார். (ச-66)

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி, கண்டாவளை, பளை, பூநகரி போன்ற சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் ஆறுமாதம் தொடக்கம் ஒன்பது மாதம் வரையான குழந்தைகளுக்கான சின்னமுத்து ருபெல்லா தடுப்பூசி ஏற்றும் பணிகள் அண்மையில் முன்னெடுக்கப்பட்டன. (ரி-113)






பிரான்ஸில் கராத்தே பயிற்றுவிப்பாளராக பல நாட்டு விருதுகளை வென்ற இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட கந்தசாமி ரவிநாதனுக்கு பிரான்ஸ் தமிழர் வர்த்தக சங்கம் 'தகைமை சால் தமிழர் விருது' வழங்கி கௌரவித்துள்ளது. (ச-75)

## மரண அறிவித்தல்

பிறப்பு · 25 · 12 · 1954



இறப்பு · 14 · 01 · 2024

**சுப்பிரமணியம் இராசு**

வடலியடைப்பை பிறப்பிடமாகவும் பங்குரு வீதி, வட்டு தென்மேற்கை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இராசு அவர்கள் கடந்த (14.01.2024) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பூபதி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், மங்களேஸ்வரியின் அன்புக் கணவரும், ஈஸ்வரன், பகீரதன், துவாரகன், துசியந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிரிஷானியின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற அன்னலட்சுமி, இலங்கைநாதன், கலாராணி, சந்திரவதனி, றோசமலர், இரவீந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2024) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 11.00 மணியளவில் சங்கரத்தை வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 53533) A-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.01.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org